தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com



RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 159 | 4 Pages | 6.1.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 159 | 4 பக்கங்கள் | 6.1.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்**
**இல்லதனின் தீய பிற**

**விளக்கம்:** பலிக்காத இடத்தில் (தன்னை விட வலியவரிடத்தில்) சினம் கொள்வது தீங்கு. பலிக்கும் இடத்திலும் (மெலியவரித்திலும்) சினத்தைவிடத் தீயவை வேறு இல்லை.

## பாகிஸ்தானில் கண்ணிவெடி தாக்குதல் 6 பேர் பலி



பாகிஸ்தான், ஜன. 6

பாகிஸ்தான் நாட்டின் பலூசிஸ்தான் மாகாணம் டர்பெட் நகரில் நேற்று பஸ் சென்றுகொண்டிருந்தது. திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அந்த பஸ்சில் 36பேர்பயணித்தனர். இதில், பலூசிஸ்தானை சேர்ந்த மூத்த போலீஸ் அதிகாரி மற்றும்அவரதுகுடும்பத்தினரும் அடக்கம்.

நியூ பஹ்மென் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது பஸ்சை குறிவைத்து கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் பஸ்சில் பயணித்த 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 25 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

மேலும், இந்த கண்ணிவெடி தாக்குதலை பலூசிஸ்தான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் நடத்தினரா? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உலகின் மிக வயதான ஜப்பானிய மூதாட்டி உயிரிழப்பு



டோக்கியோ, ஜன. 6

உலகின் வயதான பெண் என கின்னஸ் அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவர் ஸ்பெயின் நாட்டை சேர்ந்த பிரான்யாஸ்மொரேரா(117). இவர்கடந்தஆண்டுஆகஸ்ட் மாதத்தில் உயிரிழந்தார். இதையடுத்து, உலகின் மிக வயதான நபராக டூமிகோ இடுகா அங்கீகரிக்கப்பட்டார்.

இந்நிலையில், வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக டூமிகோ இடுகா தற்போது உயிரிழந்துள்ளார் என ஜப்பானின் தெற்கு நகர மேயர் ரியோசுகே தகஷிமா தெரிவித்தார்.

இதுதொடர்பாக ரியோசுகே வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

ஜப்பானின் வர்த்தக மையமான ஒசாகா அருகிலுள்ள அஷியாவில் இடுகா வசித்து வந்தார். அவருக்கு 4 வாரிசுகள் மற்றும் 5 பேரக் குழந்தைகள் உள்ளனர். கடந்த 2019 முதல் நர்சிங் ஹோமில் தங்கி இருந்த அவர், கடந்த மாதம் 29ம் தேதி மரணமடைந்தார்.

ஆஷியாவிற்கு அருகிலுள்ள ஒசாகா வணிக மையத்தில், அமெரிக்காவில் போர்டு மாடல் டி அறிமுகப்படுத்தப்படுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன் அவர் 1908, மே 23ல் பிறந்தார்.

உலகப் போர்கள், தொற்றுநோய்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்ட காலத்தில் இடுகா வாழ்ந்தார். அதற்கு நாங்கள் அவருக்கு நன்றி கூறுகிறோம். தனது வயதான காலத்தில் வாழைப்பழங்கள், பால் போன்ற குளிர்பானமான கால்பிஸை ரசித்து குடித்து நிறைவான வாழ்க்கை வாழ்ந்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொலம்பியாவில் சோகம்: சுற்றுலா பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து 13 பேர் பலி



போகோடா, ஜன.6

கொலம்பியா நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துகளால் 8,000 பேர் பலியாகிவருகின்றனர் என அந்நாட்டு போக்குவரத்து அமைச்சகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், கொலம்பியாநாட்டின்தென்மேற்கே அமைந்துள்ள நெடுஞ்சாலையில் சுற்றுலா பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் 30க்கும் அதிகமானோர் பயணித்தனர். அந்தப் பேருந்து வளைவில் திரும்பியபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் அதில் பயணம் செய்த 13 பேர் பரிதாபமாக பலியாகினர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். தகவலறிந்து அங்கு வந்த மீட்புக்குழுவினர் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்த்தனர். விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அமெரிக்க அதிபர் மனைவி பெற்ற பரிசிலேயே ரொம்ப காஸ்ட்லி மோடி கொடுத்த ரூ.17 லட்சம் மதிப்பு வைரம்

அமெரிக்கா, ஜன.6

2023 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குடும்பத்துக்கு வெளிநாட்டுத் தலைவர்கள் அளித்த பரிசுகளில் விலை உயர்ந்தது பிரதமர் மோடி அளித்த பரிசுதான் என்று தெரிய வந்துள்ளது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் அவரது மனைவி ஜில் பைடன் பெற்ற பரிசுப் பொருள்களின் விவரங்களை அந்நாட்டின் வெளியுறவுத் துறை தற்போது வெளியிட்டுள்ளது. அதன்படி, ஜோபைடனின்மனைவிக்கு பிரதமர்நரேந்திர மோடி அளித்த ரூ. 17 லட்சம் (20 ஆயிரம் டாலர்) மதிப்புள்ள 7.5 காரட் வைரம்தான், ஜில் பைடன் பெற்ற பரிசுகளிலேயே விலை உயர்ந்தது என்பது தெரிய வந்துள்ளது. உக்ரைன் தூதர் அளித்த ப்ரூச் எனப்படும் எந்த உடையிலும் அணிந்துகொள்ளும் 14,063 டாலர் மதிப்புள்ள நகை இரண்டாம் இடத்தில் உள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு தொடக்கத்தில் தனது அமெரிக்க பயணத்தின்போது பிரதமர் மோடி இந்த வைரைத்தை ஜில் பைடனுக்கு பரிசளித்தார். மேலும் அதிபர் ஜோ பைடனுக்கு செதுக்கப்பட்ட சந்தனப் பெட்டி, சிலை, எண்ணெய் விளக்கு மற்றும் 6,232 டாலர் மதிப்புள்ள 'தி டென் பிரின்சிபல் உபநிடதங்கள்' என்ற புத்தகத்தையும் மோடி பரிசாக அளித்தார். மொத்தத்தில், அமெரிக்க அதிகாரிகளுக்கு இந்தியா சார்பில் அந்த பயணத்தின்போது சுமார் $35,000 [சுமார் 32 லட்சம்] மதிப்பிலான பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

# பட்டாசு ஆலை வெடி விபத்து முதல்வர் நிவாரணம் அறிவிப்பு

விருதுநகர், ஜன.6

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள அப்பையநாயக்கன் பட்டியில் செயல்பட்டு வந்த சாய்நாத் பட்டாசு தொழிற்சாலையில் இன்று காலை ஏற்பட்ட வெடி விபத்தில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த வெடி விபத்து தொடர்பாக ஆலை உரிமையாளர்கள் பாலாஜி, சசிபாலன், மேலாளர் தாஸ், போர்மேன்பிரகாஷ் மீது 5 பிரிவுகளின்கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் பட்டாசு ஆலை வெடி விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பத்திற்கும் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.





இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில்,

வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.4 லட்ச ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ரூ.1 லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

## தென்காசி சங்கர நாராயண சுவாமி கோவில் திருவாதிரை விழாவில் நாட்டியாஞ்சலி



தென்காசி : ஜன 6

தென்காசி சங்கரநாராயண சுவாமி கோவில்திருவாதிரைதிருவிழாவில் குரு ஸ்ரீராம் நாட்டிய ஷேத்திர சபை வழங்கிய சித்திரை சபை நாட்டியஞ்சலி குரு கா. புருஷோத்தமன் நிகழ்ச்சி நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில்சங்கரநாரண சுவாமி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் திருவாதிரை திருவிழா நடைபெறுவது வழக்கம். தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் சுவாமி, அம்பாள் வீதி உலா நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. இதனை முன்னிட்டு சங்கரலிங்க சுவாமி சன்னதி முன்பு அமைந்துள்ள கொடி மரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனைமுன்னிட்டு கொடி மரத்திற்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சிகர நிகழ்ச்சியான திருவாதிரை திருவிழா 10ம் திருநாளான வருகிற ஜனவரி 13ஆம் தேதி நடைபெற உள்ளது. விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் மண்டகபடி தாரர்கள் செய்து வருகின்றனர். முதல் நாள் நிகழ்வாகசித்திரைசபை நாட்டியாஞ்சலி மாணவிகள் நடன நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவிகளுக்கு சிறப்பு பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டது ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்

## தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கியது

புதுக்கோட்டை, ஜன.6

நடப்பாண்டில் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு போட்டியான தச்சங்குறிச்சி ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கியது.

தூயவிண்ணேற்புஅன்னைஆலய அந்தோணியார்பொங்கல்விழாவை முன்னிட்டு தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வருகிறது. ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

ஜல்லிக்கட்டு போட்டியில் முதல் காளையாக கோவில் காளை அவிழ்த்து விடப்பட்டது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 750 காளைகள், 300 மாடுபிடி வீரர்கள் பங்கேற்றுள்ளனர். போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, மாடு பிடிவீரர்கள்உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

ஜல்லிக்கட்டு போட்டியை ஒட்டி தச்சங்குறிச்சியில் 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், கால்நடை பராமரிப்பு துறை சார்பில்



25 பணியாளர்களை கொண்ட 7 மருத்துவக்குழு தயார் நிலையில் உள்ளனர்.

முன்னதாக ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கிய சிறிது நேரத்திலேயே விழா மேடையில் யார் இருப்பது என்பது தொடர்பாக இருதரப்பினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து போலீசார் இருதரப்பினரையும் மேடையை விட்டு கீழே இறக்கினர்.

இதனை தொடர்ந்து ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வருகிறது.

## கிங்ஸ்டன் கல்லூரியில் 2வது நாளாக அமலாக்கத்துறை சோதனை

வேலூர், ஜன.6

வேலூர் மாவட்டம் காட்பாடியில் தி.மு.க. பொதுச்செயலாளரும், நீர் வளத்துறைஅமைச்சருமானஅமைச்சர் துரைமுருகன் வீடு உள்பட 4 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

காட்பாடியை அடுத்த பள்ளிக்குப்பம் பகுதியில் உள்ள வேலூர் மாநகர தி.மு.க. விவசாய அணி செயலாளர் பூஞ்சோலை சீனிவாசன் வீட்டிலும், அவரது உறவினர் வீட்டிலும், கதிர் ஆனந்துக்கு சொந்தமான காட்பாடி கிறிஸ்டியான்பேட்டையில் உள்ள கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியிலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியில் அமலாக்கத் துறை அதிகாரிகள் இன்று 2வது நாளாக சோதனையில் ஈடுபட்டுள்ளனர். தி.மு.க. எம்.பி. கதிர் ஆனந்துக்கு சொந்தமான கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியில் நேற்று காலை 8 மணி முதல் அமலாக்கத் துறை சோதனை நடைபெற்று வருகிறது.

## பிரேத பரிசோதனை நிறைவு சிறுமியின் உடல் தந்தையிடம் ஒப்படைப்பு

விழுப்புரம், ஜன.6

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் தனியார் பள்ளி கழிவுநீர் தொட்டியில் விழுந்து நேற்று சிறுமி லியா லட்சுமி உயிரிழந்தார்.

இதையடுத்து பள்ளி நிர்வாகத்தை கண்டித்தும், சிறுமி உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகவும் குற்றம்சாட்டிய பெற்றோர், உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுமி உயிரிழந்த நிலையில் அசம்பாவிதங்களைதவிர்க்கதனியார்பள்ளியில் முன்பு போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். வெளி ஆட்கள் பள்ளிக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் உடற்கூராய்வு நிறைவடைந்த நிலையில் சிறுமி லியாவின் உடல் அவரது தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 'ராக்கிங்' பிரச்சினையால் திருப்பூர் மாணவன் தற்கொலை கல்லூரி மாணவர்கள் 3 பேரிடம் போலீசார் விசாரணை



திருப்பூர், ஜன.6

திருப்பூா் பச்சையப்பன் நகா் முதல் வீதியைச் சோ்ந்தவா் நாகராஜ். இவரது மனைவி வேலுமணி. இவா்களது மகன் சத்யநாராயணன் (வயது 21) .கோவையில் உள்ள தனியாா் கல்லூரியில் 3ம் ஆண்டு பயின்று வந்தாா்.

வீட்டின் மாடியில் உள்ள அறையில் சத்ய நாராயணன் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் குறித்து நல்லூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தற்கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே சத்ய நாராயணன் தற்கொலை செய்வதற்கு முன்பு, தனது உறவினா்கள் மற்றும் நண்பா்கள் சிலருக்கு வாட்ஸ்அப் மூலமாக ஆடியோ பதிவு ஒன்றை அனுப்பி உள்ளார். அதில், ஒரு மாணவரின் பெயரை குறிப்பிட்டு அவா் தொடா்ந்து மிரட்டுவதாகவும், வகுப்பறையில் வைத்து அடித்ததில் இருந்து தன்னால் தூங்க முடியவில்லை. இது குறித்து கல்லூரியில் புகாா் தெரிவித்தால், வெளி ஆட்களை அழைத்து வந்து என்னை ஏதாவது செய்து விடுவாா்களோ? என்று பயமாக உள்ளது. ஆகவே, தற்கொலை செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் எனக்கு வருகிறது என பதிவாகியிருந்தது. எனவே சத்யநாராயணன் 'ராக்கிங்' காரணமாக தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என பல்வேறு கோணங்களில் போலீ சாா் விசாரணை நடத்தி வருகின்றனா். இது தொடர்பாக 3 மாணவர்களிடம் அதிரடி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணை முடிவில் சத்யநாராயணன் தற்கொலைக்கானகாரணம் குறித்து முழு விவரம் தெரியவரும் என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐஸ்கிரீம் எளிதில் கிடைக்க நடவடிக்கை ஆவின் நிறுவனம்

சென்னை, ஜன.6

தமிழ்நாட்டில் அனைத்து பொதுமக்களுக்கும் ஏற்ற வகையில் தரமானமுறையில்ஆவின் நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பால் விற்பனையில் முன்னோடி நிறுவனமாக திகழ்ந்து வருகிறது.

ஆவின் நிறுவனம் பல்வேறு வகையானபால்உபபொருட்கள் தரமான முறையில் தயாரித்து ஆவின் பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

மேலும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் விரும்பி சுவைக்கும் ஐஸ்கிரீம்களை ஆவின் நிர்வாகம் விற்பனை செய்து வருகிறது. இந்நிலையில் ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

★ ஆவின் ஐஸ்கிரீம் வகைகள் எளிதில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ ஆவின் ஐஸ்கிரீம் வகைகளை தங்களது நிகழ்ச்சிகளில் பயன்படுத்த அருகில் உள்ள ஆவின் பாலகத்தை அணுகி பயன் பெறலாம்.

★ தங்கள் இல்ல நிகழ்ச்சிகளில் ஆவின் ஐஸ்கிரீமை பயன்படுத்த 9944353459 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவித்துள்ளது.

# அரசு ஆஸ்பத்திரியில் மருத்துவ மாணவியிடம் பாலியல் சீண்டல்

சென்னை, ஜன.6

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் என்ஜினீயரிங் மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட பரபரப்பு இன்னும் அடங்காத நிலையில் சென்னையில் மேலும் ஒரு மாணவி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

தாராபுரத்தை சேர்ந்த 27 வயதான மாணவி கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரியில் முதுகலை மருத்துவ படிப்பு படித்து வருகிறார்.

கடந்த 1ந்தேதி அன்று நள்ளிரவு 1 மணி அளவில் மாணவி தனது தோழிகளுக்கு புத்தாண்டு வாழ்த்து தெரிவிப்பதற்காக மருத்துவமனை வளாகத்தில் நின்றிருந்தார். மகப்பேறு வார்டு வளாகத்தின் உள்ளே நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த வாலிபர் ஒருவர் மாணவியிடம்பாலியல்சீண்டலில் ஈடுபட்டு அத்துமீறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவி சத்தம் போட்டுள்ளார். பின்னர் ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதுபற்றி மருத்துவ அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

மாணவியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட வாலிபரின் பெயர் முகமது ஆதாம் என்பது தெரிய வந்தது. கடலூர் மாவட்டம் சேத்துப்பட்டை சேர்ந்த அவர் மது போதையில் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார். அவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.


என்ஜினீயரிங் மாணவியை தொடர்ந்து மருத்துவ மாணவியிடமும் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட சம்பவம் பெற்றோர்கள் மாணவிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்பத்தி உள்ளது.

# சென்னை துறைமுகம் 5.326 மெட்ரிக் டன் சரக்குகளை கையாண்டு சாதனை

சென்னை, ஜன.6

சென்னை துறைமுகம் கடந்த 2024ம் ஆண்டு 5.326 மில்லியன் மெட்ரிக் டன் மாதாந்திர சரக்கு போக்குவரத்தைகையாண்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் முதல் முறையாக சென்னை துறைமுகம் இந்த மைல்கல்லை எட்டி சாதனை படைத்துள்ளது. இந்த சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்த பல்வேறு பங்களிப்பாளர்களின் முயற்சிகளை சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்தின் தலைவர் சுனில் பாலிவால் பாராட்டினார்.



# தமிழக சட்டசபை திங்கட்கிழமை கூடுகிறது கவர்னர் உரை தயாரிப்பு பணிகள் நிறைவு

சென்னை, ஜன.6

பெரியார் தலைமையில் கேரள மாநிலம் வைக்கத்தில் நடைபெற்ற போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழா கடந்த மாதம் தமிழக அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் தமிழக முதலமைச்சர் மு.க., ஸ்டாலின், கேரள முதல் மந்திரி பினராய் விஜயன், விடுதலை சிறுத்தைகள் கழக தலைவர் திருமாவளவன், திராவிட கழக தலைவர் கி.வீரமணி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.



நேற்று முன்தினம் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற காங்கிரஸ் தியாகி பார்த்தசாரதி செட்டியார் நினைவுநாள் நிகழச்சியில் கலந்து கொண்ட அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் டாக்டர் செல்லக்குமார் பேசும் போது, வைக்கம் போராட்ட வெற்றி என்பது காங்கிரசுக்கு கிடைத்த வெற்றி. ஆனால் இன்று எல்லோரும் உரிமை கொண்டாடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

தீண்டாமைக்கு எதிராக காங்கிரஸ் நாடுதழுவிய அளவில் போராடியது. அப்போது வைக்கத்தில் நடத்தப்பட்ட போராட்ட வெற்றியின் நூற்றாண்டு விழாவை தமிழக அரசு சமீபத்தில் கொண்டாடியது.

உண்மையான வைக்கம் போராட்ட வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும். அதன் உரிமை காங்கிரசுக்கு சொந்தமானது.

வைக்கம் போராட்டத்தில் கேரளாவில் காங்கிரஸ் தோழர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். அவர்கள் அனைவரும் ஜெயிலில் அடைக்கப்பட்டதால் காந்தியடிகள் காங்கிரசின் பிரதிநிதியாக பெரியாரை கேரளாவுக்கு அனுப்பி வைத்தார். அப்படித்தான் பெரியார் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டார்,

இப்போது நான் கர்நாடகா, ஒடிசா மாநில பொறுப்பாளராக இருக்கிறேன். அங்கு சோனியா, ராகுல் உத்தரவின் பேரில் அவர்களது பிரதிநிதியாக ஒரு பேராட்டத்துக்கு சென்றால் அந்த வெற்றி எனக்கு கிடைக்கும் வெற்றி அல்ல காங்கிரசுக்கு கிடைக்கும் வெற்றி.

அதே போலத்தான் அன்று பெரியாரின் போராட்ட வெற்றி என்பது காங்கிரசுக்கு கிடைத்த வெற்றி.

ஆனால் இப்போது காங்கிரஸ் பெற்று தந்த வெற்றிகளையெல்லாம் காங்கிரசை புறந்தள்ளிவிட்டு மற்றவர்கள் அனுபவிக்கிறார்கள்.

தமிழகத்தில் 56 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியில் இல்லை. இன்றைய அரசியல் ஓட்டுக்கு நோட்டு என்ற நிலையில் உள்ளது. ஆனால் அந்த ஓட்டு போடும் உரிமையை அனைவருக்கும் பெற்றுத் தந்த கட்சி காங்கிரஸ் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கோவில் உண்டியலை உடைத்து திருடிய 3 பேரை உடனே மடக்கி பிடித்த போலீசார்

சீர்காழி, ஜன.6

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் சட்டைநாதர் சுவாமி கோவில் தெற்கு கோபுர வாசல் அருகே ஆபத்து விநாயகர் கோவில் உள்ளது.



இக்கோவிலில் நள்ளிரவு வெளிப்புறம் உள்ள சில்வர் கேட்டை உடைத்து உள்ளே புகுந்த மர்ம நபர்கள் உண்டியலை உடைத்து பணத்தைதிருடிக்கொண்டிருந்தனர். அப்போது அவ்வழியாக இரவு ரோந்து சென்ற பெட்ரோல் போலீஸ் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் சண்முகசுந்தரம், தலைமை ஏட்டு ஸ்டாலின் ஆகியோர் கோவில் கதவு உடைக்கப்பட்டு திறந்து இருப்பதைக் கண்டு அங்கு சென்றனர்.

அப்போது போலீசாரை பார்த்ததும் ஒரு நபர் தப்பி ஓடினார். அங்கே இருந்த மற்ற இருவரை போலீசார் மடக்கி பிடித்து போலீஸ் நிலையம் அழைத்து வந்து விசாரணை செய்தனர். அதில் அவர்கள் சீர்காழி அய்யனார் கோவில் தெருவை சேர்ந்த கொளஞ்சி (வயது 42 ), அவரது சகோதரர் முத்து (35) என்பதும் தப்பி ஓடியவர் விளந்திட சமுத்திரம் அஞ்சலை நகர் பகுதியை சேர்ந்த இலக்கியன் (29) என்பதும் தெரியும் வந்தது.

இவர்களிடம் இருந்து கோவில் உண்டியலில் கொள்ளையடித்து மூட்டை மூட்டையாக கட்டி வைத்திருந்த சுமார் ரூ.2 லட்சம் மற்றும் காசுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதனிடையே தப்பி ஓடிய இலக்கியன் சீர்காழி விளந்திட சமுத்திரம் வில்வா நகரில் உள்ள ஒரு வீட்டின் கதவை உடைத்து திருட முயன்ற போது சத்தம் கேட்டு வெளியே வந்த வீட்டின் உரிமையாளரை தாக்கி தப்பி ஓடினார். இந்த தாக்குதலில் உரிமையாளர் காயமடைந்தார்.

இதனைஅறிந்த இன்ஸ்பெக்டர் புயல். பாலசந்திரன், சப்இன்ஸ்பெக்டர் காயத்ரி, தலைமை ஏட்டு அன்பரசன், காவலர்கள் மணிகண்டன், ரஞ்சித், ரம்யா, தனிப்பிரிவு காவலர் சார்லஸ் ஆகியோர் விளந்திடசமுத்திரம் பகுதிக்கு உடனடியாக சென்றுதப்பி ஓடிய இலக்கியனை தேடினர். அப்போது அப்பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில்பதுங்கிஇருந்த இலக்கியனை மடக்கி பிடித்தனர்.

தொடர்ந்து கொளஞ்சி, முத்து, இலக்கியன் ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். கோவில் உண்டியல் திருட்டு, வீட்டில் திருட முயற்சி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 3 பேரையும் உடனடியாக போலீசார் மடக்கி பிடித்த சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பாராட்டை பெற்றுள்ளது.

# ஆளுநரை சந்தித்த பா.ஜ.க. மகளிர் அணி: மாணவி வன்கொடுமை வழக்கில் சிபிஐ விசாரணைக்கு கோரிக்கை

சென்னை, ஜன.6

தமிழிசை, குஷ்பு, ராதிகா, விஜயதாரணி உள்ளிட்ட தமிழக பாஜக மகளிர் அணி தலைவர்கள் இன்று ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்தனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழிசை சவுந்தரராஜன் கூறியதாவது:




★ எந்த ஊரைச் சார்ந்தவர் இந்த சார்? எந்த இயக்கத்தை சார்ந்தவர் இந்த சார்?. எந்த பகுதியைச் சார்ந்தவர் இந்த சார்?. இது எங்களுக்கு தெரிய வேண்டும்.

★ எங்களுடைய அனைவருடைய கருத்துக்களையும் ஆளுநர் ஆர்.என். ரவி பொறுமையாக கேட்டறிந்தார்.

★ பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நியாயம் கிடைக்க வேண்டும்.

★ இந்த ஒரு வழக்கு அல்ல. ஆளும் திமுகவினரால் பெண்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை அதிகாரப்பூர்வமாக சொல்லியிருக்கிறோம்.

★ 30.8.2024ல் 4வது படிக்கும் சிறுமி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு இருக்கிறார்.

★ 14.8.2024ல் 4 பேர் சேரந்து கூட்டு பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

★ 6.8.2023ல் வளசரவாக்கத்தில் நடந்த இது போன்ற சம்பவத்திலும் திமுகவினர் தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதை தெரிவித்திருக்கிறோம்.

★ தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை. பல்கலைக்கழங்களுக்குள் பாதுகாப்பில்லை.

★ உயர்க்கல்வி அமைச்சர் சொல்கிற மாதிரி ஏதோ ஒரு நிகழ்வு நடந்திருச்சி என்று எங்களால் போக முடியாது. எல்லோரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

★ நிர்பயா நிதியை எவ்வாறு செலவு செய்துள்ளீர்கள். பலவற்றை ஏன் மறைக்க பார்க்கிறீர்கள்?

★ உயர்க்கல்வி அமைச்சர் கருத்துக்கும், போலீஸ் கமிஷனர் கருத்துக்கும் இடையில் மாறுப்பட்ட கருத்து இருந்தது.

★ ஏன் இன்னொரு சாரை மறைக்க பார்க்கிறீர்கள்?.

★ முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் ஏன் குரலை எழுப்பவில்லை?

★ எங்கோ ஒரு மாநிலத்தில் நடந்தால் முதல்வர் பேசுவார். தன்னுடைய மாநிலத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஏன் வாயை திறக்கவில்லை.

★ விசாரணை முடிந்தால் யார் அந்த சார் என்பது தெரிந்துவிடும் என கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

★ விசாரணை சரியாக நடைபெறாததால்தான் நாங்கள்பயப்படுகிறோம். குற்றவாளிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்கிறீர்கள். திராவிட மாடல் அரசு குற்றவாளிகளுக்கு உறுதுணையாக இருக்கிறது.

★ போராடும் பெண் தலைவர்கள் கைதாகிறார்கள். கைதாக வேண்டிய குற்றவாளிகள் நடமாடுகிறார்கள். இதுதான் திராவிட மாடல் அரசு. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற நிகழ்வுகள் இனிமேல் நடக்கக் கூடாது.

★ சிபிஐ விசாரணை வந்தால் மட்டுமே இங்குள்ள பாரபட்சமான நிகழ்வுகள் வெளிக்கொண்டு வரப்படும்.

# பொங்கலுக்கு 6 நாட்கள் விடுமுறை தமிழக அரசு அதிரடி

சென்னை, ஜன.6

பொங்கல் பண்டிகை கொண்டாட வெளியூர் செல்வோர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஜனவரி 14,15,16, ஆகிய நாட்கள் ஏற்கனவே விடுமுறை அறிவிக்கப்பட்ட நிலையில் 17ந் தேதியும் விடுமுறை என தமிழக அரசு அறிவித்துள்ளது.

அனைத்து கல்வி நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஜனவரி 17ந் தேதியும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பொங்கல் பண்டிகையை கொண்டாட வெளியூர் செல்வோர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அந்த விடுமுறையை ஈடுசெய்யும் வகையில் வரும் 25ம் தேதி பணி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.






பொங்கலுக்கு முந்தைய நாள் திங்கட்கிழமை அதாவது ஜனவரி 13 ம் தேதி விடுமுறை விடப்பட வேண்டும் எனவும், இதனை தொடர்ந்து பொங்கல் பண்டிகை முடிந்து ஜனவரி 17ம் தேதி வெள்ளிக்கிழமை விடுமுறை விட வேண்டும்எனகோரிக்கை எழுந்தது குறிப்பிடத்தக்கது.

# ஞானசேகரன் வீட்டில் 5 மணி நேரம் எஸ்.ஐ.டி. சோதனை: லேப்டாப் மற்றும் முக்கிய ஆவணங்கள் சிக்கின




சென்னை, ஜன.6

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது பல்வேறு வழக்குகள் ஏற்கனவே நிலுவையில் உள்ளது.

மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் ஞானசேகரனை தவிர்த்து மற்றொரு நபரும் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகப்படப்படுகிறது. மாணவியை மிரட்டும்போது போனில் SIR எனகுறிப்பிட்டுள்ளார். அந்த SIR யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே இது தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழு (SIT) விசாரணைமேற்கொண்டு வருகிறது. இந்த விசாரணைக் குழு அதிகாரிகள் இன்று காலை ஞானசேகரன் வீட்டில் சோதனை மேற்கொண்டனர்.

சுமார் 5 மணி நேரம் சோதனை நடத்தினர். இதில் ஞானசேகரன்பயன்படுத்தி வந்த லேப்டாப் மற்றும் முக்கிய ஆவணங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

ஞானசேகரன் இது போன்ற பல சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக கூறுப்படுகிறது.

இதனால் லேப்டாப்பை ஆய்வு செய்தால் அவர் எடுத்த வீடியோக்களை அதில் சேமித்து வைத்துள்ளாரா? என்பது தெரிய வரும்.

ஞானசேகரன் மீது கொள்ளை தொடர்பான வழக்குகள் உள்ளது. தொடர்பாக அவருடைய இரண்டு மனைவிகளிடம் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

கொள்ளையடித்த பணத்தில் நகைகள், சொத்துகள் வாங்கினாரா? என்ற கோணத்தில் அதிகாரிகள் விசாரணைமேற்கொண்டனர்.

# மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் உதயநிதி ஸ்டாலின் மவுனமாக இருப்பது ஏன்? அண்ணாமலை கேள்வி



சென்னை, ஜன.6

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் என்ஜினீயரிங் மாணவி ஒருவர் தனது ஆண் நண்பர்களுடன் இரவில் பேசிக் கொண்டிருந்த போது ஆண் நண்பரை கொடூரமாகதாக்கிவிட்டுமாணவி பாலியல் சித்ரவதைக்கு ள்ளாக்கப்பட்டார்.

நாடு முழுவதும் அதிர்வலைகளை உருவாக்கிய இந்த விவகாரம் தொடர்பாக ஞானசேகரன் (37) என்ற பிரியாணி கடைக்காரர் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்தில் மற்றொரு 'சாரும்' சம்பந்தப்பட்டு இருப்பதாக மாணவி கொடுத்துள்ள வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை சார் என்று குறிப்பிட்ட அந்த நபர் யார் என்பது இன்னும் வெளிவரவில்லை.

இந்த விவகாரத்தில் உண்மை வெளிவர வேண்டும் என்று பா.ஜ.க. தொடர்ந்து போராடி வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக அண்ணாமலை கூறியதாவது:

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான இடமாக தமிழகம் மாற வேண்டும் என்பதுதான் எல்லோரது எதிர்பார்ப்பும். ஏற்கனவே பாதிக்கப்பட்டு மனம் உடைந்து போன அந்த மாணவியை அவமானப்படுத்த எப்.ஐ.ஆரை கசியவிட்டு செய்யக்கூடாத அனைத்தையும் தி.மு.க. அரசு செய்து உள்ளது.

ஏற்கனவே பல குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் ஞானசேகரன். அவர் அந்த மாணவியை வீடியோ படம் எடுத்து மிரட்டி இருக்கிறார். இவ்வளவு கொடூரமான குற்றவாளியை போலீசார் கண்காணிக்காமல் இருந்தது ஏன்?

ஆளும் தி.மு.க.வை சேர்ந்தவர் என்பதால் அமைச்சர்களுடன் வைத்திருந்த தொடர்பு, கட்சி செல்வாக்கு ஆகியவற்றால் போலீஸ் கண்டு கொள்ளவில்லை. அவருடைய குற்றப்பின்னணி, அமைச்சர்களுடன் உள்ள தொடர்புகள் பற்றி புகைப்பட ஆதாரங்களை வெளியிட்டும் அவரை குற்றவாளி என்று யாரும் பேசுவதில்லை. அதற்கு மாறாக பாதிக்கப்பட்ட மாணவி தான் தவறு செய்தவர் என்ற கதையை கட்டமைக்க தி.மு.க.வினர் முயற்சிக்கிறார்கள்.

குற்றவாளி ஞானசேகரன் தி.மு.க.வை சேர்ந்தவர் என்பதால் மனசாட்சியே இல்லாமல் பேசுகிறார்கள். 201415ம் ஆண்டிலும் இவர் மீது இதே போன்ற ஒரு வழக்கு பதிவாகி இருக்கிறது. அப்படி இருந்தும் அவரை பாதுகாக்க முயல்வது வெட்க கேடானது.

கொடூர குற்றவாளியிடம்இருந்துஉயிர்பிழைத்த அந்த மாணவிக்கு இழப்பீடாக ரூ.25 லட்சம் வழங்க ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. ஆனால் பாதிக்கப்பட்ட மாணவியின் தனிப்பட்ட விபரங்கள் கசிந்ததால் ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும்.

ஒரு அரசியல் கட்சியின் அடிப்படை வேலை என்பது ஜனநாயகத்தில் தவறுகளை கண்டிப்பது, எதிர்ப்பு தெரிவிப்பது என்று நான் எப்போதும் நம்புகிறேன். இந்த வழக்கில் சென்னை ஐகோர்ட்டின் கருத்துக்கள் தி.மு.க.வால் திரிக்கப்பட்டுஉள்ளது.

2026 தேர்தலில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு முதலமைச்சர் பதவி என்ற இமேஜை பாதுகாப்பதில் தி.மு.க. தீவிரமாக இருக்கிறது. ஆனால் இந்த விவகாரத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் மவுனமாக இருப்பது ஏன்?

ஜனநாயகம், இந்திய அரசியலமைப்பு சட்டம் பற்றி பேசும் ராகுல் காந்தி தமிழகம் வந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோரை பார்க்காமல் மவுனம் காப்பது ஏன்?

இந்த விவகாரத்தில் நீதிக்காக போராடுபவர்களை அடக்கி ஒடுக்குவதில் தி.மு.க. தீவிரமாக உள்ளது. மதுரையில் நடந்த போராட்டத்தில் குஷ்பு மற்றும் பா.ஜ.க. மகளிர் அணி தலைவி உமாரதி ராஜன் மற்றும் மகளிர் அணியினரை கைது செய்து ஆட்டுக் கொட்டகையில் அடைத்து கொடூர ஆட்சியின் குரூர முகத்தை காட்டி இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஆதரவற்றோர் விடுதி அருகே 2 பெண் குழந்தைகளை விட்டு சென்றனர்: கல் நெஞ்சம் படைத்தவர்கள் யார்?

வாணியம்பாடி, ஜன.6

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அருகே கருணை இல்லம் என்ற ஆதரவற்றோர் விடுதி செயல்பட்டு வருகிறது.

நேற்று நள்ளிரவில் விடுதியின் அருகில் 2 பெண் குழந்தைகளை விட்டு சென்றுவிட்டனர். குழந்தைகளின் அழுகை குரல் கேட்டது. இதனால் விடுதி காப்பாளர்கள் அங்கே சென்று பார்த்தனர். அப்போது 2 பெண் குழந்தைகள் கடும் குளிரில் அழுது கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.



கருணை இல்ல நிர்வாகம் அந்தப் பெண் குழந்தைகளை மீட்டனர். அப்போது அடையாளம் தெரியாத நபர் தொலைவில் ஓடுவதை கண்டு, கருணை இல்ல நிர்வாகிகள் உடனடியாக அங்கு சென்று பார்த்தனர். அந்த நபர் அங்கிருந்து ஓடிவிட்டார்.

இது குறித்து வாணியம்பாடி டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குழந்தைகளிடம் விசாரணை நடத்தினர். பூர்த்தி வந்தனா (வயது 2), பிருந்தா (1) என்று தங்களது பெயர்களை கூறினர்.

போலீசார் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். மேலும் குழந்தைகளை கருணை இல்லத்தில் விட்டுச்சென்ற கல் நெஞ்சம் படைத்தவர்களை தேடி வருகின்றனர்.

# மின் கம்பத்தில் மோதி சாலையோர பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்து



திருக்கோவிலூர், ஜன.6

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தை அடுத்த மோட்டாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் மேல்மருவத்தூர் ஆதிபாராசக்தி கோவிலுக்கு மாலை அணிவித்து விரதம் இருந்து வந்தனர்.

இந்நிலையில் சம்பவத்தன்று தனியார் பஸ் மூலம் சுமார் 60 பேர் மேல்மருவத்தூர் ஆதிபரா சக்தி கோவிலுக்கு சென்றுவிட்டு பின்னர் மேல்மலை யனூர் அங்காளம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பினர்.

இதனையடுத்து நேற்று இரவு திருவண்ணாமலை மணலூர்பேட்டை வழியாக சொந்த ஊருக்கு வந்து கொண்டிருந்தனர். இரவு 11 மணி அளவில் அந்த பஸ் மணலூர்பேட்டைமா டாம்பூண்டி கூட்ரோடு இடையே வரும்பொழுது அருதங்குடி கிராமம் அருகே பஸ் திடீரென சாலை ஓரம் இருந்த மின் கம்பத்தில் மோதி சாலையோரபள்ளத்தில்கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதனால் பஸ்சில் இருந்த பக்தர்கள் காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள் என கூச்சலிட்டனர்.

சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்த பொது மக்கள் ஓடி வந்து கவிழ்ந்து கிடந்த பஸ்சில் இருந்த பக்தர்களை மீட்டனர். இதில் சுமார் 20 பக்தர்கள் பலத்த காயமடைந்தனர்.

விபத்து குறித்த தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ மற்றும் திருக்கோவிலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோர் விபத்தில் சிக்கியவர்களை உடனடியாக மீட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் பணியில் பொதுமக்கள் மற்றும் போலீசாருடன் இணைந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ஈடுபட்டனர்.

இதனையடுத்து உயிர் தப்பிய பக்தர்களை மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு வேன் மூலம் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியையும் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. செய்தார். இந்த விபத்தினால் அந்தப் பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் பதட்டமான சூழ்நிலை காணப்பட்டது.

இதனையடுத்து போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் பஸ் டிரைவர் கண் அசைந்து தூங்கியதே விபத்துக்கான காரணம் என தெரியவந்தது. மேலும் இந்த விபத்து குறித்து திருப்பால பந்தல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த விபத்து குறித்து இன்று காலை மாவட்ட கலெக்டர் பிரசாந்த், தாசில்தார் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

# உரிய நடவடிக்கை எடுத்த பிறகும் எதிர்க்கட்சிகள் அரசியல் செய்ய பார்க்கிறார்கள் கனிமொழி

சென்னை, ஜன6

சென்னையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

மணிப்பூர் போன்ற மாநிலங்களில் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு இன்று வரை நியாயம் கிடைக்கவில்லை. அங்கு நம்முடையபிரதமர்அங்கு சென்று என்ன என்று கூட கேட்கவில்லை.

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு குற்றம் நடந்து இருக்கிறது. ஒரு பெண் பாதிக்கப்பட்டுள்ளார். நம்முடைய காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது.

காவல்துறை நடவடிக்கை எடுத்த பிறகு, வழக்கு கோர்ட்டில் நடைபெற்று வருகிறது.

நீதிமன்றத்தில் வழக்கு சரியாக நடத்தப்பட்டு, குற்றவாளிக்கு நியாயமான



தண்டனை கிடைப்பதுதான் அந்த பெண்ணுக்கான நியாயம் கிடைத்ததாக இருக்கும். நாம் அதில் தான் கவனம் செலுத்த வேண்டும்.

அண்ணா பல்கலை. சம்பவத்திற்கு நான் என்னுடைய கண்டனத்தை தெரிவித்து இருக்கிறேன்.

பொள்ளாச்சி சம்பவம் போல் குற்றவாளிகளை காப்பாற்றக்கூடிய ஒரு நிலை இல்லை.

குற்றவாளியாராக இருந்தாலும் கைது செய்யப்பட வேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றம் நியாயமாக தீர்ப்பு வழங்க வேண்டும். வழக்கு சரியாக நடத்தப்படுகிறா என்பதை கண்காணிக்க வேண்டும்.

விசாரணையில் 'யார் அந்த சார்'... என்பது வெளிப்படலாம். அல்லது அப்படி ஒரு நபர் இல்லை என்பதும் தெரியவரலாம்.

நிர்பயா வழக்கில் கூட பா.ஜ.க.வில் சில பேர் 'அண்ணா' என்று சொல்லி இருந்தால் விட்டுருப்பார்கள் என்று சொன்னார்கள். நான் அப்படி சொல்லவில்லை.

நடவடிக்கை எடுத்த பிறகு போராடக்கூடிய ஒரு சூழல் இருக்கும் போது, எதிர்க்கட்சி அதை கையில் எடுத்துக் கொண்டு அரசியலாக்கத் தான் பார்க்கிறார்கள்.

எப்.ஐ.ஆர். வெளியானதற்கு தமிழக அரசு காரணம் இல்லை.

அண்ணாமலை சவுக்கால் அடித்துக்கொண்டதற்கு நான் என்ன சொல்ல முடியும்.

ஆடுகள் அடைக்கும் இடத்தில் ஆடுகளை விட்டு விட்டு ஏன் மனுஷங்களை அடைக்கப் போகிறார்கள் என்று கூறினார்.

# 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை டீ மாஸ்டர் உள்பட 3 பேர் கைது

திருச்சி, ஜன.6

திருச்சி மாவட்டம் துறையூரை சேர்ந்த செல்வராஜ் என்பவரது மகன் குமார் (வயது 34). இவர் திருப்பூர் மாவட்டம் பொங்கலூரை அடுத்த வேலம்பட்டி பகுதியில் உள்ள ஒரு டீக்கடையில் டீ மாஸ்டராக வேலை செய்து வந்தார். இவர் 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அவினாசிபாளையம் போலீசாரிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

அதன் பேரில் போலீசார் அந்த சிறுமியிடம் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் சிறுமிக்கு டீ மாஸ்டர் பாலியல் தொந்தரவு கொடுத்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் போக்சோ சட்டத்தில் டீ மாஸ்டர் குமாரை கைது செய்தனர்.

இதே போல் வடக்கு அவினாசிபாளையம் வேலம்பட்டியைச் சேர்ந்த மகேஷ் குமார் (28) மற்றும் சூலூர் கண்ணம்பாளையத்தைச் சேர்ந்த ராமலிங்கம் என்பவரது மகன் குட்டி என்ற சிரஞ்சீவி (19) ஆகியோரும் அந்த சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் போக்சோ சட்டத்தில் மகேஷ்குமார் மற்றும் குட்டி என்கிற சிரஞ்சீவி ஆகியோரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மேலும் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த மேலும் சிலரை போலீசார் வலைவீசி தேடி வருகிறார்கள்.


# குடிபோதையில் தகராறு செய்த மகனை வெட்டிக்கொன்ற தந்தை

தேனி, ஜன.6

தேனி மாவட்டம் வருசநாடு அருகில் உள்ள சிங்கராஜபுரத்தை சேர்ந்தவர் தமிழன் (வயது55). இவரது மனைவி ஜெயலட்சுமி. இவர்களுக்கு ரிவன் ராஜா (30) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

ரிவன்ராஜா குடிபழக்கத்திற்கு அடிமையானதால் யாரும் பெண் தர மறுத்துள்ளனர். இதனால் எந்த வேலைக்கும் செல்லாமல் தினமும் குடித்து விட்டு வீட்டில் தனது பெற்றோரிடம் தகராறு செய்து வந்துள்ளார்.

மேலும் தனது தாயிடம் மது குடிக்க பணம் தருமாறு கேட்டும் தொந்தரவு செய்து வந்துள்ளார். நேற்று இரவும் மது குடிக்க பணம் கேட்டு தகராறு செய்தார். இதனால் அவரது தந்தைக்கும் ரிவன்ராஜாவுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் குடிபோதையில் ரிவன்ராஜா தூங்க சென்று விட்டார். நள்ளிரவில் தூங்கிக்கொண்டிருந்த தனது மகனை தமிழன் அரிவாளால் சரமாரியாக வெட்டினார். இதில் சம்பவ இடத்திலேயே அவர் ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார். இன்று அதிகாலை வருசநாடு போலீஸ் நிலையத்திற்கு சென்ற தமிழன் தான் வெட்டிய அரிவாளுடன் சரண் அடைந்தார். பின்னர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று கொலை செய்யப்பட்ட வாலிபர் உடலை மீட்டு தேனி அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.



மேலும் மகனை வெட்டிக்கொன்ற தமிழனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 2 அரசு பள்ளி தலைமை ஆசிரியர்கள் இடமாற்றம் பல்வேறு புகாரால் கல்வித்துறை அதிகாரிகள் நடவடிக்கை

தருமபுரி, ஜன.6

தருமபுரி நகரில் உள்ள இரண்டு அரசு பள்ளிகளில் பணியாற்றிய தலைமை ஆசிரியர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் கல்வித்துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தருமபுரி நகரில் உள்ள அவ்வையார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த பள்ளியில் தலைமை ஆசிரியர் தெரேசால், பணி ஓய்வு பெற்றதைஅடுத்துகடந்த ஓராண்டுக்கு முன்பு கலைச்செல்வி, என்பவர் பாலக்கோடு மகளிர் அரசு பள்ளியில் இருந்து அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்று கொண்டார்.

இந்த நிலையில் 100 ஆண்டு பழமை வாய்ந்த




இப்பள்ளி தகைச்சாள் பள்ளியாக தரம் உயர்த்தப் பட்டது. தரம் உயர்த்தப்பட்ட பள்ளிக்கு தற்காலிகமாக ஆசிரியர்களை நியமித்ததில் முறைகேடு நடந்ததாக தலைமை ஆசிரியை கலைச்செல்வி மீது புகார் எழுந்துள்ளது.

மேலும் அவர் மீது 50 க்கும் மேற்பட்ட பல்வேறு முறைகேடு புகார்களை தருமபுரிக்கு வந்த அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்திடம் பெற்றோர்கள் புகார் மனு அளித்தனர். இதை அடுத்து கல்வித்துறை அதிகாரிகள் தலைமை ஆசிரியர் மீது கூறப்பட்ட புகார் உண்மைதானா என விசாரணை நடத்தினர். இதில் முறைகேடு நடந்தது தெரியவந்தது.

இதை அடுத்து நேற்று முன்தினம் தலைமை ஆசிரியை கலைச்செல்வி காமலாபுரம் அரசு மேல்நிலை பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கிருந்த தலைமை ஆசிரியர் சுதா, அவ்வையார் அரசு பள்ளிக்கு தலைமை ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் பொறுபேற்றார்.

இதே போல் தருமபுரி நகர் அதியமான் ஆண்கள் பள்ளியில் கடந்த இரண்டு ஆண்டாக தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்தவர் தங்கவேலு. இவர் பொறுப்பேற்ற பின்னர் பொதுத் தேர்வில் தேர்ச்சி குறைவு, போட்டி தேர்வுகளில் மாணவர்கள் ஒருவர் கூட வெற்றி பெறாதது, உயர் கல்வி அதிகாரிகளுடன் இணக்கமாக செயல்படாதது என பல்வேறு குற்றச்சாட்டுகள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரால் கூறப்பட்டது.

அதியமான் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் தங்கவேலு வத்தல்மலை அரசு மேல் நிலைப் பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

வத்தல்மலையில் பணியாற்றிய தலைமை ஆசிரியர் காமராஜ் தருமபுரி டவுன் அதியமான் அரசு மேல்நிலை பள்ளிக்கு தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார்.

ஒரே நாளில் இரு மேல் நிலை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் அதிரடியாக இடமாற்றம் செய்யப்பட்டது கல்வித் துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

# பட்டாசு ஆலை வெடி விபத்து 4 பேர் மீது போலீசார் வழக்கு

சாத்தூர், ஜன.6

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள அப்பையநாயக்கன்பட்டியில் சாய்நாத் பட்டாசு தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இங்கு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த பெண்கள் உள்பட 30க்கும் மேற்பட்டோர் வேலை பார்த்து வருகிறார்கள். தற்போது பட்டாசு ஆலையில் வெடிகள் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.



இன்று காலை பட்டாசு ஆலையில் உள்ள ஒரு அறையில் மருந்து கலக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது உராய்வு ஏற்பட்டு பயங்கர சத்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மருந்து கலக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அதே பகுதியை சேர்ந்த வேல்முருகன், நாகராஜ், கண்ணன், சிவக்குமார், காமராஜ், மீனாட்சிசுந்தரம் ஆகிய 6 தொழிலாளர்கள் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்தில் இடிபாடுகளில் சிதறி கிடந்த உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைகளுக்காக சாத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் பட்டாசு ஆலை விபத்து தொடர்பாக 4 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஆலை உரிமையாளர்கள் பாலாஜி, சசிபாலன், மேலாளர் தாஸ், போர்மேன் பிரகாஷ் மீது 5 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

அஜாக்கிரதையாக செயல்பட்டு உயிரிழப்பு ஏற்படுத்தியது, உரிய பாதுகாப்பின்றி தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்தியது உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# பட்டாசு ஆலை பாதுகாப்பில் தொடர்ந்து மெத்தனப்போக்கு திமுக அரசை சாடிய எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜன. 6

அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

விருதுநகர் மாவட்டம் அப்பையநாயக்கன்பட்டி பகுதியில் உள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்ததாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தங்களையும்






தெரிவித்துக்கொள்கிறேன் .

முறையான பாதுகாப்பு ஆய்வுகளை மேற்கொள்ளாமல், பட்டாசு ஆலை பாதுகாப்பில் தொடர்ந்து மெத்தனப் போக்கில் செயல்படும் திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

பட்டாசு ஆலை விபத்தால் பாதிக்கப்பட்டு, உயிரிழந்தோர் குடும்பத்தாருக்கு உரிய நிவாரணம் அளிப்பதுடன்; இனியாவது பட்டாசு ஆலைகளில் பாதுகாப்பு நெறிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதிசெய்யுமாறு மு.க.ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# கந்து வட்டி புகார் நாகர்கோவில் காசிக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை



நாகர்கோவில், ஜன.6

நாகர்கோவில் காசி மற்றும் அவரது தந்தை தங்கபாண்டியன் ஆகிய இருவர் மீது கந்துவட்டி புகார் அளிக்கப்பட்ட நிலையில், இது தொடர்பான வழக்கு கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பு வெளியானது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், நாகர்கோவில் காசிக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் அவரது தந்தை தங்கபாண்டியனுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

மேலும் இந்த வழக்கில் இடைத்தரகர் நாராயணன் என்பவருக்கு 3 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இளம்பெண்களை பாலியல் வன்கொடுமை செய்து வீடியோ எடுத்து மிரட்டிய வழக்கில், நாகர்கோவில் காசிக்கு ஆயுள் தண்டனை, ரூ. 1 லட்சத்து அபராதமும் விதித்து மகளிர் சிறப்பு கோர்ட் தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கது.

# சேலம் டவுன் பெரியார் தெருவில் பொது மக்களே அமைத்த காங்கிரீட் சாலை



சேலம், ஜன.6

சேலம் பழைய பஸ் நிலைய கடை வீதியில் உள்ள பெரியார் தெரு பகுதியில் 500க்கும் மேற்பட்ட தங்க நகை ஆசாரி கடைகள் உள்ளன. மேலும் ஏராளமான வீடுகள், வணிக நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இதனால் இந்த சாலையில் தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. மிகவும் முக்கியமான இந்த சாலை கடந்த சில மாதங்களாக காங்கிரீட் பெயர்ந்து குண்டும், குழியுமாக காட்சி அளித்தது. இதனால் வாகனங்கள் செல்ல முடியாமலும், பொது மக்கள் நடந்து கூட செல்ல முடியாமலும் அவதிப்பட்டனர்.

இந்த நிலையில் சாக்கடை கழிவுகள் தெருவில் தேங்கி நின்று பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவித்து வந்தது. இதனால் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் அடிக்கடி விழுந்து எழுந்து சென்ற நிகழ்வுகளும் நடந்தது.

இது குறித்து அந்த பகுதி மக்கள் மற்றும் வியாபாரிகள், வார்டு கவுன்சிலர் மற்றும் மாநகராட்சி அதிகாரியிடமும் பல முறை முறையிட்டனர். ஆனாலும் எந்த பணியும் நடைபெறவில்லை. இதையடுத்து அந்த பகுதி பொது மக்கள் பணம் வசூல் செய்து புதிதாக காங்கிரீட் சாலை அமைக்க முடிவு செய்தனர். அதன் படி அந்த பகுதி பொது மக்கள், வியாபாரிகளிடம் பணம் வசூல் செய்து காங்கிரீட் சாலை அமைத்தனர். தற்போது அந்த வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சேலம் மாநகரில் பல்வேறு சாலைகள் தோண்டப்பட்டு நீண்ட நாட்களாக பணிகள் கிடப்பில் உள்ளன. அதனால் அந்த வழியாக வாகன ஓட்டிகள் செல்ல முடியாத நிலை உள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் தவித்து வருகிறார்கள்.

எனவே வரும் காலங்களில் பொது மக்களின் அடிப்படை வசதிகளில் தீவிர கவனம் செலுத்தி மாநகராட்சி அதிகாரிகள் மக்களுக்கு தேவையான வசதிகளை உடனுக்குடன் செய்து கொடுக்க வேண்டும் என்பது அனைத்து தரப்பு மக்களின் பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.

# கொடைக்கானல் ஓட்டலில் சுற்றுலா பயணிகளை கடுமையாக தாக்கிய 6 பேர் கைது





கொடைக்கானல், ஜன.6

மதுரை நாகமலை புதுக்கோட்டையை சேர்ந்த ரவிக்குமார் மகன் ஜஸ்வந்த்குமார் (வயது28). இவர் சகோதரி ஜெனி (27), இவரது கணவர் திலிப் (29), இவர்களது உறவினர் மாலன் (22) ஆகிய 4 பேரும் கொடைக்கானலுக்கு சுற்றுலா வந்தனர்.

மூஞ்சிக்கல் அருகே உள்ள தனியார் ஓட்டலில் உணவு வாங்கி சாப்பிட்டனர். அந்த உணவு பொருட்களில் துர்நாற்றம் வீசியதால் வேறு உணவு மாற்றி கொடுக்கும்படி ஜஸ்வந்த் குமார் தெரிவித்தார். ஆனால் கடை ஊழியர்கள் அதனை மாற்றித்தர மறுத்ததுடன் அவர்களுடன் வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர்.

இதனையடுத்து உணவு பொருட்களை ஜஸ்வந்த் குமார் தனது செல்போனில் வீடியோவாக படம் எடுத்தார். இதனால் ஆத்திரம் அடைந்த ஓட்டல் ஊழியர்கள் அவர்கள் 4 பேரையும்கடுமையாகதாக்கினர்.

படம் எடுத்த செல்போன்களை வாங்கி உடைத்ததுடன் சுற்றுலா பயணிகளையும் தாக்கி கொலை மிரட்டல் விடுத்தனர். படுகாயம் அடைந்த அவர்கள் காரில் ஆஸ்பத்திரிக்கு செல்ல முயன்ற போது வழிவிடாமல் காரையும் அடித்து நொறுக்கினர். ஒரு வழியாக அவர்கள் 4 பேரும் கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வந்தனர்.

பின்னர் தங்களுக்கு நேர்ந்த விஷயம் குறித்து அவர்கள் பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. சர்வதேச சுற்றுலா தலமான கொடைக்கானலுக்கு வரும் பயணிகளுக்கு பாதுகாப்பு இல்லை. தமிழ்நாட்டில் இருந்து வருபவர்களுக்கே இந்த நிலை என்றால் வெளிநாட்டில் இருந்து வருபவர்களை எவ்வாறு மதிப்பார்கள்? எனவே போலீசார் இப்பிரச்சனையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

மேலும் கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு செல்லமுயன்றபோது அங்கும் தங்களை தாக்க ஓட்டல் ஊழியர்கள் வந்ததால் நாங்கள் மதுரைக்கு செல்வதாக தெரிவித்தனர். இச்சம்பவம் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து கொடைக்கானல் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

போலீசார் ஓட்டலில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்த போது ஊழியர்களே சுற்றுலா பயணிகளை தாக்கியது உறுதியானது. மேலும் பெண் என்றும் பாராமல் சுற்றுலா பயணிகளை கடுமையாக தாக்கியது தெரியவந்ததால் ஓட்டல் ஊழியர்களான முகமது அலி (32), தர்வீஸ் முகைதீன் (35), அர்சத் (27), அரவிந்த் (27), சர்தார் (34), ஆஷிப்ரகுமான் (38) ஆகிய 6 பேரை கைது செய்தனர்.

புகாருக்கு உள்ளான ஓட்டல் மீது ஏற்கனவே பல வேறு குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் போலீசார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. கேரள சுற்றுலா பயணிகளை இதேபோல் ஒரு அறையில் அடைத்து வைத்து தாக்கியதாக புகார் உள்ளது. மேலும் இதுபோன்று தரமற்ற உணவுகள் வழங்கி வருவதால் மற்ற ஓட்டல் நிறுவனங்களுக்கும் அவப்பெயர் ஏற்படுவதால் இதன்மீது அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தாயை கொலை செய்து விட்டு தந்தைக்கு போன் செய்து கூறிய சிறுவன்




தென்காசி, ஜன.6

தென்காசி மாவட்டம் கடையம் அருகே உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வரும் தம்பதியினருக்கு 2 மகன்கள் உள்ளனர். அதில் 17 வயதான மூத்த மகனுக்கு திடீரென மனநலம் சற்று பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அவர் எங்கும் செல்லாமல் வீட்டில் இருந்து வந்தார்.

இந்நிலையில் நேற்று சிறுவனின் தந்தை வேலைக்கு சென்றுவிட்ட நிலையில், இரவில் சிறுவனின் 45 வயதான தாய் வீட்டில் படுத்து தூங்கி கொண்டிருந்தார். அப்போது சிறுவன் அங்கு வந்து திடீரென அம்மிக்கல்லை எடுத்து தாயின் தலையில் போட்டுக்கொலை செய்தான். பின்னர் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போன அந்த சிறுவன், தனது தந்தைக்கு போன் செய்து அம்மாவின் தலையில் அம்மிக்கல்லை போட்டுவிட்டேன். தலையில் இருந்து ரத்தம் கொட்டுகிறது என்று கூறியுள்ளான்.

உடனே பதறிப்போன அவர், தனது வீட்டிற்கு அருகில் வசிக்கும் நபர்களிடம் போனில் தகவல் தெரிவித்துள்ளார். அவர்கள் விரைந்து வந்து பார்த்தபோது அந்த பெண் இறந்து கிடந்தார்.

இதுகுறித்து கடையம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து பெண்ணின்உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தென்காசி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து சிறுவனை கைது செய்தனர். அவனை போலீஸ் நிலையத்தில் வைத்திருந்த போது, தனது தாயை நினைத்து தேம்பி தேம்பி அழுது கொண்டே இருந்தான்.

மேலும் அங்கிருந்த போலீசாரிடம், எனது தாயை எங்கே, நான் அவரிடம் போக வேண்டும் என்று அழுதபடியே கேட்ட சம்பவம் அங்கிருந்தவர்களை கண் கலங்க செய்தது. தொடர்ந்து விசாரணைக்கு பின்னர் சிறுவனை நெல்லையில் உள்ள சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் ஒப்படைத்தனர்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிவு



மேட்டூர், ஜன.6


காவிரி டெல்டா பாசன பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு கடந்த நவம்பர் மாதம் 19ந் தேதி விநாடிக்கு 1,000 கன அடியாக குறைக்கப்பட்டது. மழை நீடித்ததால் டிசம்பர் 21ந் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு 500 கன அடியாக குறைக்கப்பட்டது. நீர் திறப்பை விட வரத்து அதிகமாக இருந்ததால், அணையின் நீர்மட்டம் மெல்ல உயரத்தொடங்கியது. கடந்த டிசம்பர் மாதம் 31ந்தேதி இரவு கடந்த ஆண்டில் 3வது முறையாக மேட்டூர் அணை நிரம்பியது.

தற்போதுகாவிரிடெல்டா மாவட்டங்களில் மழை இல்லாததால், பாசனத்திற்கு நீர் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அணைக்கு வரும் நீரின் அளவைவிட பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால் நிரம்பி இருந்த அணையின் நீர்மட்டம் குறையத் தொடங்கி உள்ளது. நேற்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.76 அடியிலிருந்து இன்று காலை 119.14 அடியாக குறைந்தது.

அணைக்கு வரும் நீரின் அளவு 1,992 கன அடியில் 1128 கன அடியாக சரிந்து உள்ளது. அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்கு 12,000 கன அடியும் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 300 கன அடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 92.10 டி.எம்.சியாக உள்ளது.

# கேள்வி ஞானம் இருந்தால் சினிமா துறையில் சாதிக்கலாம்பாக்யராஜ்




குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியில் 2 நாள் குறும்பட விழா நடைபெற்றது.

இதில் 84 குறும்படங்கள் திரையிடப்பட்டன. நிறைவு நாளான நேற்று சிறந்த படங்களை தேர்வு செய்து விருது வழங்கப்பட்டது. இதில் 10 படங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதில் முதல் 3 இடங்களை பிடித்த ஆதிகுடி, துணை, கூட்டத்தில் ஒருவன் ஆகிய குறும்படங்களுக்கு விருது வழங்கப்பட்டது.

விழாவில் நடிகரும், இயக்குனருமான பாக்யராஜ் கலந்து கொண்டு வெற்றி பெற்ற இயக்குநர்களுக்குவிருதுகளைவழங்கிகவுரவித்தார். மேலும் 15 குறும்படங்களுக்கு ஆறுதல் பரிசுகளையும் வழங்கினார்.

சினிமாவை கண்டுபிடித்தவருக்கும், நான் சினிமாவுக்கு வர காரணமாக இருந்தவர், எனக்கு ஊக்கம் அளித்த ஆசிரியர்களுக்கு நன்றி. தோல்வியை கண்டு யாரும் பயப்படக்கூடாது. தோல்வி தான் நமது வெற்றிக்கு முதல் படி. அதனை உணர்ந்து செயல்பட வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு எந்தவிதமான விழிப்புணர்வும் இல்லாததால் உலகில் என்ன நடக்கிறது எனக் கூட தெரியாத நிலை இருந்தது. விமானம் மேலே பறந்தால் அதிசயமாக பார்ப்பார்கள். நாளடைவில் டூரிங் டாக்கீஸ் குத்தகைக்கு எடுத்து படங்களை திரையிட்ட பின்னர்தான் இதுதான் உலகம் என தெரிந்து கொண்டனர். இதற்கு சினிமாவும் ஒரு முக்கிய காரணம்.

கோபி செட்டிபாளையத்தில் முதன்முறையாக கேமராவை எடுத்துக் கொண்டு போன ஒரே நபர் நான் தான். அதன்பின்னர் ராசியான ஊர் என்பதால் அங்கு அதிகளவில் படப்பிடிப்புகள் நடந்தது. நான் முன் அனுபவமே இல்லாமல் கதை எழுதி சினிமாவில் கால் பதித்தேன். அதற்கு கேள்வி ஞானம் இருந்தால் போதும். கேள்வி ஞானம் இருந்தாலே சினிமா துறையில் சாதிக்கலாம். தற்போது உள்ள இளைஞர்கள் சினிமா வாய்ப்பு கேட்டு எங்கும் அலைய வேண்டாம். குறும்படங்கள் எடுத்து அதனை தயாரிப்பாளர் மற்றும் இயக்குனர்களுக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்கு ஏற்றார் போல்படம் இருந்தது என்றால் உடனடியாக வாய்ப்பு கிடைக்கும். இன்று பெரும்பாலானோர் குறும்படங்கள் மூலம் தான் திரைப்பட இயக்குனராகி வருகின்றனர். சினிமாவில் புதிய தொழில்நுட்பம் அதிக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கேற்றார் போல் இளைஞர்களும் தங்களது திறமையை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சிட்னி டெஸ்ட்: 6 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றி



ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னி நகரில் நடைபெற்று வருகிறது. இன்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியா வெற்றி பெற 162 ரன்களை இலக்காக நிர்ணயித்தது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ஆஸ்திரேலிய வீரர்கள் துவக்கத்தில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்திய அணி பந்துவீச்சில் விக்கெட்டுகளை எடுக்கும் முனைப்பு காட்டியது. மூன்றாம் நாள் ஆட்டத்தில் மதிய உணவு இடைவெளிக்கு முன்பு வரை ஆஸ்திரேலிய அணி 13 ஓவர்களை எதிர்கொண்டு விளையாடியது. இந்தியா சார்பில் முகமது சிராஜ் மற்றும் பிரசித் கிருஷ்ணா பந்துவீசினர்.

ஆஸ்திரேலியா அணியின் துவக்க வீரரான சாம் கோன்ஸ்டாஸ் 22 ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த மார்னஸ் லபுஷேன் 6 ரன்களுக்கும், இவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஸ்டீவன் ஸ்மித் 4 ரன்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர். இதனால் உணவு இடைவேளையின் போது ஆஸ்திரேலியா அணி 71 ரன்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்தது.

உணவு இடைவெளிக்கு பிறகு முகமது சிராஜ் வீசிய பந்தில் உஸ்மான் குவாஜா ஆட்டமிழந்து வெளியேறினார். இதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியா அணி ரன் குவிப்பில் கவனம் செலுத்தியது. அந்த அணியின் டிராவிஸ் ஹெட் மற்றும் வெஸ்டர் இந்திய அணி பந்துவீச்சாளர்களிடம் சிக்காமல் ரன் குவித்தனர்.

இதனால் ஆஸ்திரேலியா அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ரன்களை சேர்த்தது. இதன் மூலம் ஆஸ்திரேலியா அணி ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மேலும், இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 31 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த வெற்றி மூலம் ஆஸ்திரேலியா அணி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கும் முன்னேறியது.

# திருவள்ளுவர் வாழ்க்கை வரலாறு படத்தில் இளையராஜா

அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்களின் வாழ்க்கை வரலாறு படமாக்கப்பட்டு வரும் சூழல், 'டிரெண்ட்' ஆகி வருகிறது.

அந்தவகையில் பெருந்தலைவர் காமராஜர் வாழ்க்கை வரலாற்றை 'காமராஜ்' என்ற பெயரில் திரைப்படமாக தயாரித்த ரமணா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம், தற்போது 'திருக்குறள்' என்ற திரைப்படத்தைத் தயாரித்துள்ளது.

ஏ.ஜே.பாலகிருஷ்ணன் இயக்கத்தில் உருவாகி வரும் இப்படத்தில் திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு சொல்லப்பட்டுள்ளது. வள்ளுவராக கலைச்சோழன், வாசுகியாக தனலட்சுமி நடிக்கிறார்கள்.

படத்துக்கு இளையராஜா இசையமைப்பதுடன், இரண்டு பாடல்களையும் அவரே எழுதியுள்ளார்.

இதுகுறித்து இயக்குனர் பாலகிருஷ்ணன் கூறும்போது, "திருக்குறள் படத்தின் இசைக் கோர்ப்பு பணிகளையும் முடித்துவிட்டு இளையராஜா என்னை அழைத்தார். இதுவரை நானே இசையமைக்காத, தொடாத ஒரு வித்தியாசமான டியூனை பயன்படுத்தி இருக்கிறேன் என்று சொல்லி, 'முல்லை வாசம்' என்ற பாடலை போட்டு காண்பித்தார்.

தயாரிப்பு பணியில் மதுரையை சேர்ந்த டி.பி.ராஜேந்திரனின் பங்கு அளப்பரியது. அதேபோல நடிகர் நடிகைகளும் சிறப்பாக நடித்துள்ளனர். குறிப்பாக வாசுகியாக நடிக்கும் தனலட்சுமி விரதம் இருந்து நடித்து தந்தார். படம் விரைவில் வெளியாகும்'' என்றார்.

# சிட்னி டெஸ்ட்: 3 விக்கெட்டுகளை இழந்த ஆஸ்திரேலியா



ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னி நகரில் நடைபெற்று வருகிறது. இன்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி ஆஸ்திரேலியா வெற்றி பெற 162 ரன்களை இலக்காக நிர்ணயித்தது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய ஆஸ்திரேலிய வீரர்கள் துவக்கத்தில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். குறைந்த இலக்கு மற்றும் இரண்டு நாட்கள் முழுமையாக இருப்பதால் அந்த அணி எடுத்ததவும் ரன் குவிப்பில் ஈடுபடவில்லை.

மறுப்பக்கம் இந்திய அணி பந்துவீச்சில் விக்கெட்டுகளை எடுக்கும் முனைப்பு காட்டியது. மூன்றாம் நாள் ஆட்டத்தில் மதிய உணவு இடைவெளிக்கு முன்பு வரை ஆஸ்திரேலிய அணி 13 ஓவர்களை எதிர்கொண்டு விளையாடியது. இந்தியா சார்பில் முகமது சிராஜ் மற்றும் பிரசித் கிருஷ்ணா பந்துவீசினர்.

ஆஸ்திரேலியா அணியின் துவக்க வீரரான சாம் கோன்ஸ்டாஸ் 22 ரன்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த மார்னஸ் லபுஷேன் 6 ரன்களுக்கும், இவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஸ்டீவன் ஸ்மித் 4 ரன்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர். இதனால் உணவு இடைவேளையின் போது ஆஸ்திரேலியா அணி 71 ரன்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்துள்ளது.

இந்தியா சார்பில் சிறப்பாக பந்துவீசிய பிரசித் கிருஷ்ணா மூன்று விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இன்றைய ஆட்ட நேரம் முடிய இன்னும் 65 ஓவர்களுக்கும் மேல் இருப்பதால், உணவு இடைவெளிக்கு பிறகும் இந்திய அணி விக்கெட்டுகளை கைப்பற்றுவதில் கவனம் செலுத்தி வெற்றி பெற முனைப்பு காட்டும் என்று தெரிகிறது. மறுபுறம் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற 91 ரன்கள் மட்டுமே அடிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தருணம் திரைப்படத்தின் `என்னை நீங்காதே நீ' வீடியோ பாடல் வெளியீடு







'தேஜாவு' படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமான அரவிந்த் ஸ்ரீநிவாசன் இயக்கியுள்ள தருணம் படத்தில் கிஷன் தாஸ் மற்றும் ஸ்ம்ருதி கதையின் நாயகர்களாக நடித்துள்ளனர். மேலும் இப்படத்தில் பால சரவணன், ராஜ் அய்யப்பன், கீதா கைலாசம், ஸ்ரீஜாரவி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ராஜா பட்டார்ஜி ஒளிப்பதிவாளராகவும், அருள் சித்தார்த் படத்தொகுப்பாளராகவும் பணியாற்றியுள்ள இப்படத்திற்கு தர்புகா சிவா பாடல்களுக்கான இசையும், அஸ்வின் ஹேமந்த் பிண்ணனி இசையும் மேற்கொண்டுள்ளனர். திரைப்படம் வரும் பொங்கலை முன்னிட்டு வரும் ஜனவரி 14 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

இந்நிலையில் படத்தின் பாடலான என்னை நீங்காதே நீ பாடலின் வீடியோ பாடல் தற்பொழுது வெளியாகியுள்ளது. இப்பாடலை மதன் கார்கி வரிகளில் கபில் கபிலன் மற்றும் பவித்ரா சாரி இணைந்து இப்பாடலை பாடியுள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.